*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 330/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW–1 (LW–1)***

*Name / Father's Name:* ***திருமதி.மாரியம்மாள் க/பெ. நாராயணன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22.07.2025.**

துவக்க நேரம் 01.15 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது காமக்காபாளையத்தில் குடியிருந்து, வீட்டுவேலை செய்து வருகிறேன். சென்றவருடம், 21ம் தேதி, 5வது மாதம் எனது மகள் வீட்டிற்கு சென்றுவிட்டு, திரும்ப நானும், எனது மகனும், எனது பேரனும் மணிவிழுந்தானில் இருந்து, தலைவாசல் வந்து, அங்கிருந்து வீரகனூர் செல்லும் வழியில் உள்ள பாத்திரக்கடை முன்பாக இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபொழுது, எங்களுக்கு எதிரே வந்த ஆட்டோ எங்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டதில், நாங்கள் தூக்கிவீசப்பட்டோம்.

2) அந்த விபத்தில் எனது மகன் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். எனது பேரனுக்கு வலதுகாலில் எலும்பு முறிவும், வலது கையில் எலும்பு முறிவும் ஏற்பட்டுவிட்டது. எனக்கு எனது வலதுகை மணிக்கட்டில் உள்ள எலும்பு கிராக் ஆகிவிட்டது.

3) விபத்தில் அடிபட்டு இறந்த எனது மகனை ஒருவண்டியிலும், என்னையும், எனது பேரனையும் ஒருவண்டியிலும் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்தார்கள். நடந்த சம்பவத்தை குறித்து ஆத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து, தலைவாசல் காவல் நிலைய போலிசார், என்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம்

காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) எனக்கு எழுத படிக்க தெரியாது என்று சொன்னால் சரிதான். எனது, போலிசார் விசாரணையிலும், புகார் வாக்குமூலத்திலும் என்னிடம் கைரேகை வாங்கினார்கள் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்றும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் கையெழுத்து செய்ததில் உள்ள சங்கதிகளை எனக்கு, போலிசார் படித்து காண்பித்தார்களா என்றால் எனது சின்னமகளிடம் படித்து காண்பித்தார்கள், நான் அதில் கைரேகை வைத்தேன்.

2) இந்த வழக்கிற்கு யார், என்னை கூப்பிட்டு நான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் போலிஸ்தான் கூப்பிட்டு வந்தேன். இறந்த பெரியசாமி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது மகன். எந்த தேதி, எந்த நேரம் சம்பவம் நடந்தது என்றால் 21ம் தேதி, 5வது மாதம், மாலை சுமார் 06.00 மணி இருக்கும்.

3) எனது மகன் எந்த கிழமையில் இறந்தார் என்றால் செவ்வாய்கிழமையில் இறந்தார். சம்பவத்தன்று நாங்கள் எந்த திசையிலிருந்து எந்த திசைக்கு சென்றோம் என்றால் வடக்கு திசையிலிருந்து தெற்கு திசை நோக்கி சென்றோம். சம்பவம் நடந்த சாலை என்ன சாலை என்றால் அந்த சாலை திருச்சி மெயின்ரோடு.

4) எங்களது வண்டியில் நாங்கள் எத்தனை பேர் சென்றோம் என்றால் 3 பேர் சென்றோம். 3பேரும் எங்களது ஒரே இருசக்கர வாகனத்தில் சென்றோமா என்றால் ஆமாம். நாங்கள் மூவரும் தலைக்கவசம் அணிந்திருந்தோமா என்றால்

இல்லை. எங்களது இருசக்கர வாகனத்தை யார் ஓட்ட, யார் உட்கார்ந்து சென்றோம் என்றால் எனது மகன் பெரியசாமி வாகனத்தை ஓட்ட, நானும், எனது பேரனும் உட்கார்ந்து சென்றோம்.

5) நான் வயது முதிர்ந்த பெண்மணி என்பதால் என்னால் இருசக்கரவாகனத்தில் இருபுறமும் காலிட்டு அமரமுடியாது என்றால் சரிதான், பக்கவாட்டில் உட்கார்ந்து சென்றேன். நான் எந்த திசையை பார்த்தவாறு உட்கார்ந்து வந்தேன் என்றால் கிழக்கு திசை பார்த்தவாறு அமர்ந்திருந்தேன்.

6) நான் கிழக்கு திசையை பார்த்து அமர்ந்து சென்றதால், யாருடைய தவறினால் விபத்து நடந்தது என்று என்னால் சொல்லமுடியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. சம்பவத்தில் அடிபட்ட பிறகு யார் எங்களுக்கு உதவி செய்தது என்றால் அக்கம் பக்கம் இருந்தவர்கள் உதவினார்கள்.

7) எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் சிகிச்சையில் சேர்ந்தேனா என்றால் சேர்ந்தேன். நான் சிகிச்சை சேரவில்லை என்றும், வழக்கிற்காக நான், மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

8) இவ்விபத்து குறித்து எந்த போலிசார், என்னை எப்போது வந்து விசாரித்தார்கள் என்றால் தலைவாசல் போலிசார் மருத்துவமனைக்கு வந்து, விபத்து நடந்த அன்று இரவு 10.00–11.00 மணிக்குள் என்னிடம் விசாரித்தார்கள்.

9) இவ்விபத்து சம்பவத்தில் எத்தனை வாகனங்கள் சம்மந்தப்பட்டது என்றால் இரண்டு வாகனங்கள். மேற்படி விபத்தில் மூன்று வாகனங்கள் சம்மந்தப்பட்டுள்ளது என்று எனது பேரனின் சேலம், ப்ரீத்தம் மருத்துவமனை விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10) இவ்விபத்தில் எதிரியின் வாகனம் சம்மந்தப்படாததால்தான், புகார் வாக்குமூலத்திலும், முதல் தகவல் அறிக்கையிலும் விபத்து ஏற்படுத்திய வாகனமாக எதிரியின் வாகன எண்.TN 21 BQ 8929 என்று குறிப்பிடுவதற்கு பதிலாக, வேறொரு வாகனத்தின் பதிவு எண்ணான TN 21 DQ 8929 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

11) நான், எனது போலிசார் மறுவிசாரணையில் எங்களுக்கு விபத்து ஏற்படுத்திய வாகன எண்ணை தவறாக குறிப்பிட்டுவிட்டேன் என்று மறுவாக்குமூலம் அளித்துள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சென்ற சாலை ஒருவழிச்சாலையா என்றால் ஆமாம். அந்த சாலையில் எந்தபுறம் சென்றோம் என்றால் இடதுபுறமாக சென்றோம்.

12) நாங்கள் இருசக்கர வாகனத்தில் செல்லவேண்டிய நபர்களுக்கு அதிகமாக இருசக்கர வாகனத்தில் பயணம் செய்ததாலும், பயணம் செய்த நாங்கள் தலைக்கவசம் அணியாததாலும், மேலும் எங்களது கவனக்குறைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னாலும், எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்று சொன்னாலும், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

13) சம்பவம் நான் சொன்னதுபோல் நடைபெறாததால்தான் போலிசார் விசாரணையிலும், புகார் வாக்குமூலத்திலும் சம்பவ தேதி குறித்து முன்னுக்கு பின் முரணாக சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் ஓட்டிய வாகனத்திற்கு அவருக்கு ஓட்டுநர் உரிமம், காப்பீட்டு சான்று, பதிவு சான்று இல்லை என்ற நிலையில், எனது மகன் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்றதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, விபத்தில் வாகனம் மோதியவுடன்

நான் கீழே குனிந்தமாதிரி விழுந்துவிட்டதால் விபத்தை நேரடியாக பார்க்க முடியவில்லை.

14) சம்பவம் நடந்த சாலை மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள சாலை என்றாலும், பொதுவாக வாகனங்கள் மெதுவாகத்தான் செல்லும் என்றாலும் சரிதான். எங்கள் மீது மோதிய வண்டி மெதுவாக வந்ததா என்றால் இல்லை, வேகமாக வந்தது. எங்கள் மீது மோதிய வாகனத்தின் நிறம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

முடிவு நேரம் 01.46 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.07.22 17:59:01 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 330/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-2)***

*Name / Father's Name:* ***செல்வன்.சந்தோஷ் த/பெ. சக்திவேல்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22.07.2025.**

துவக்க நேரம் 03.34 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கூகையூரில் குடியிருந்து, 9ம் வகுப்பு படித்து வருகிறேன். கடந்த 21.05.2024 அன்று நானும், எனது மாமா, எனது ஆயா ஆகிய மூவரும் Hero இருசக்கர வாகனத்தில் மணிவிழுந்தானிலிருந்து, காமாக்காபாளையம் செல்வதற்காக மும்முடி அருகில் சென்றுகொண்டிருந்தபொழுது, எங்களுக்கு முன்பாக வந்த டெம்போ எங்களது வாகனத்தின் மீது மோதி, எங்களை தூக்கி அடித்துவிட்டது.

2) மேற்படி விபத்தில் எனது வலது கால் எலும்பு மற்றும் எனது வலதுகையில் உள்ள மணிக்கட்டு எலும்பிலும் முறிவு ஏற்பட்டுவிட்டது. **(சாட்சி தனது வலது கால் மற்றும் வலது கையில் சிகிச்சை செய்யப்பட்டுள்ள இடங்களை காண்பித்து சாட்சியம் அளிக்கிறார், சாட்சியை பார்க்கையில் சாட்சி தற்பொழுது மேற்படி விபத்தில் ஏற்பட்ட எலும்பு முறிவினால் Walking Stick வைத்து பயன்படுத்தி வருகிறார்).**

3) மேற்படி விபத்தில் எனது ஆயாவிற்கு, அவரது வலதுகையின் கட்டைவிரலுக்கு செல்லும் நரம்பு கட்டாகிவிட்டது. மேற்படி விபத்தில் எனது மாமா பெரியசாமி சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். பின்பு காயம்பட்ட நானும், எனது ஆயாவும் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்து

சேர்ந்தோம். பின்பு மேல் சிகிச்சைக்காக என்னை, சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு நான்கு நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டு, ப்ரீத்தம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனது காலில் பிளேட் வைத்து ஆப்பரேசன் செய்யப்பட்டுள்ளது. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கிற்கு யார், என்னை கூப்பிட்டு நான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் என் பாட்டி அழைத்ததன்பேரில் நான் வந்தேன். விபத்தில் இறந்த பெரியசாமி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது மாமா ஆவார். சம்பவத்தன்று எந்த திசையிலிருந்து எந்த நோக்கி சென்றோம் என்றால் திசை எனக்கு தெரியவில்லை.

2) சம்பவசாலை ஒருவழிச்சாலை என்றால் சரிதான். அந்த சாலையில் மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்பதால் வாகனங்கள் அங்கு மெதுவாகத்தான் செல்லும் என்றால் சரிதான். நான் சென்ற வண்டியை யார் ஓட்டியது என்றால் என் மாமா ஓட்டினார்.

3) என் மாமாவிற்கு வண்டி ஓட்டத்தெரியாது என்று சொன்னால் சரியல்ல, நன்றாக ஓட்டுவார். எதனடிப்படையில் எனது மாமா வண்டியை நன்றாக ஓட்டுவார் என்று சொன்னேன் என்றால் எனது மாமா இருசக்கர வாகனம் மட்டுமில்லாது நெல்அறுக்கும் வாகனத்தை ஓட்டி நான் பார்த்துள்ளேன் என்பதால் என் மாமா நன்றாக வண்டி ஓட்டுவார் என்று நான் சொன்னேன்.

4) சம்பவம் நடந்த சமயத்தில் நான் எதை பார்த்தவாறு சென்றுகொண்டிருந்தேன் என்றால் கடைகளை பார்த்தவாறு சென்றேன். நான் கடைகளை பார்த்தவாறு பயணம் செய்துகொண்டிருந்ததால், எந்த வாகனம், எங்கள் மீது மோதியது என்று குறிப்பிட்டு என்னால் சொல்லமுடியாது என்று

சொன்னால் சரிதான். சம்பவசமயம் நாங்கள் தலைக்கவசம் அணியவில்லை என்று சொன்னால் சரிதான்.

5) சம்பவம் ஏற்பட்ட பிறகு, நான் படபடப்பில் இருந்ததால், யாருக்கு அப்பொழுது என்ன காயம் ஆனது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். எங்கள் மீது விபத்து ஏற்படுத்திய வண்டிகளின் எண்ணிக்கை எத்தனை என்றால் ஒன்று.

6) நான், சேலம், ப்ரீத்தம் மருத்துவமனையில் நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கும்பொழுது என் மீது விட்ட வாகனங்களின் எண்ணிக்கை இரண்டு என்று சொன்னேனா என்றால் இல்லை, நான் சொல்லவில்லை. சேலம், ப்ரீத்தம் மருத்துவமனை வழங்கிய எனது மருத்துவ விபத்து பதிவேட்டில் கார், பிக்கப், இருசக்கர வாகனம் ஆகிய மூன்று வாகனங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

7) இவ்விபத்து சம்மந்தமாக போலிசார், என்னிடம் விசாரித்தார்களா என்றால் ஆமாம். நான் எந்த ஆவணத்திலாவது கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. நாங்கள் சம்பவத்தின்பொழுது சாலையின் எந்த பக்கம் சென்றோம் என்றால் சாலையின் இடதுபுறம் சென்றோம்.

8) ஆஜர் எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. இதற்கு முன்பு ஆஜர் எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு வேகத்தில் எனது மாமா பெரியசாமி வண்டியை ஓட்டிச்சென்றார் என்றால் எனது மாமா மெதுவாகத்தான் சென்றார், எங்களுக்கு எதிரே வந்த ஆட்டோ வேகமாக வந்து எங்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்து சமயத்தில் நான் கடைகளை வேடிக்கை பார்த்துக்கொண்டு சென்றதால், எந்த வண்டி எந்த வேகத்தில் வந்தது என்னால் சொல்லமுடியாது என்று சொன்னால் சரிதான்.

9) கண்ணுற்ற சாட்சிகளான காசிலிங்கம், வெங்கடேஷ்வரன், அருண் ஆகியோர்கள் சம்பவயிடத்தில் இருந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்திய வாகனம் ஆட்டோ, டெம்போ

என்று முன்னுக்கு பின் முரணாக சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்ற சொன்னால் சரியல்ல. நான் சொல்லியுள்ள டெம்போ மற்றும் ஆட்டோவின் நிறம் தெரியுமா என்றால் தெரியாது.

10) சம்பவசாலை ஒருவழிச்சாலை என்பதால், அந்த சாலையில் மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றும், அதில் வாகனங்கள் அங்கு மெதுவாகத்தான் செல்லும் என்றாலும், அதனால் எதிரியின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் இந்த விபத்து ஏற்படவில்லை என்றும், அவர் அவரது வாகனத்தை மெதுவாகத்தான் ஓட்டிச்சென்றார் என்று சொன்னாலும் சரியல்ல.

11) விபத்தில் இறந்துபோன எனது மாமா உரிய ஓட்டுனர் உரிமம், காப்பீட்டு சான்று, பதிவு சான்று ஆகியவைகள் இல்லாமலும், பயணம் செய்த நாங்கள் தலைக்கவசம் அணியாமலும், சாலை விதிகளை முறையாக கடைபிடிக்காமலும், மோட்டார் வாகன சட்ட விதிகளுக்கு முரணாக நாங்கள் இருசக்கர வாகனத்தில் செல்லவேண்டிய நபர்களுக்கு அதிகமாக இருசக்கர வாகனத்தில் பயணம் செய்ததாலும், எனது மாமா நாங்கள் சென்ற வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னாலும், எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்று சொன்னாலும், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

முடிவு நேரம் 03.55 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.07.22 17:59:09 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 330/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-7)***

*Name / Father's Name:* ***திரு.ஆனந்த் த/பெ. ராமர்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22.07.2025.**

துவக்க நேரம் 03.56 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது காமக்காபாளையத்தில் குடியிருந்து, வேலைக்கு படித்து வருகிறேன். விபத்தில் இறந்த பெரியசாமி, எனது மாமா ஆவார். கடந்த 21.05.2024 அன்று எனது மாமா பெரியசாமி, மணிவிழுந்தானுக்கு சென்றுவிட்டு அவரது வீட்டிற்கு வரவேண்டி மும்முடி அருகே திரும்ப வந்துகொண்டிருந்தபொழுது, அவருக்கு எதிரே வந்த பிக்கப் வாகனம் அவர்மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனது ஊர்க்கார் ஒருவர், எனக்கு தகவல் சொன்னார்.

2) விபத்து குறித்து தகவல் கிடைத்தவுடன் நான், சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தேன். அந்த இடத்தில் சந்தோஷ் தம்பிக்கு காலில் அடிபட்டிருந்தது. எனது மாமா இறந்துகிடந்தார். பின்பு 108 ஆம்புலன்சை வரவழைத்து, அடிபட்டவர்களை, ஆத்துார் அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்து சிகிச்சைக்கு சேர்த்தேன். விபத்தில் இறந்த எனது மாமாவின் பிரேதத்தின் மீது, ஆத்துார் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து போலிசார் பிரேத விசாரணை செய்து, என்னையும் விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

1) இச்சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்து குறித்து கேள்விபட்டுதான் நான் சென்று பார்த்தேனா என்றால் ஆமாம். விபத்தில் இறந்தவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது அக்காவின் கணவர்.

2) யார், என்னை பிரேத பரிசோதனைக்கு சாட்சியாக இருக்கச்சொல்லி அழைத்தார்கள் என்றால் இறந்தவர் என் மாமா என்பதால் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு நான் சென்றபொழுது தலைவாசல் போலிசார் சாட்சியாக இருக்கச்சொல்லி கேட்டதன் பேரில் சாட்சி கையொப்பம் செய்தேன்.

3) பிரேத விசாரணை எப்பொழுது நடைபெற்றது என்றால் எனது மாமா இறந்த மறுநாள் நடைபெற்றது. பிரேத விசாரணை தொடங்கி, முடிந்த நேரம் என்றால் நியாபகமில்லை. பிரேத விசாரணை நடைபெற்றபொழுது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் நிறைய நபர்கள் இருந்தார்கள். நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் விபத்தில் இறந்துபோன எனது மாமாவின் இறப்பிற்கு காரணம் எது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான், நான் கேள்விபட்ட வகையில் பிக்கப் வண்டி, என் மாமாவின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை தெரிந்துகொண்டேன்.

4) நான், எனது மாமாவின் உடலை பார்த்தது குறித்து முன்னுக்கு பின் முரணாக சம்பவயிடத்தில் வைத்து பார்த்ததாக முதல்விசாரணையிலும், ஆத்தூர் சவக்கிடங்கில் வைத்து பார்த்தாக போலிசார் விசாரணையிலும் சொல்லி முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் உறவினர் என்பதால் இவ்வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 04.06 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.07.22 17:59:33 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 330/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-9)***

*Name / Father's Name:* ***திருமதி.சித்ரா க/பெ. சக்தி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22.07.2025.**

துவக்க நேரம் 04.07 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது மணிவிழுந்தான் வடக்கில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த பெரியசாமி, எனது அண்ணன். கடந்த 21.05.2024 அன்று எனது அண்ணன் பெரியசாமி, எனது அக்கா மகன், எனது அம்மா ஆகியோர் மணிவிழுந்தானிலிருந்து வீட்டிற்கு வரவேண்டி மும்முடி அருகே திரும்ப வந்துகொண்டிருந்தபொழுது, அவர்களுக்கு எதிரே வந்த பிக்கப் வாகனம் அவர்கள்மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனது அக்கா, எனக்கு தகவல் சொன்னார்.

2) விபத்து குறித்து தகவல் கிடைத்தவுடன் நான், ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எனது அக்கா மகனுக்கு ஆத்தூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி செய்து, மேல் சிகிச்சைக்கு சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று, பின்பு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தோம். விபத்தில் இறந்த எனது மாமாவின் உடலின் மீது போலிசார் மறுநாள் பிரேத விசாரணை செய்தார்கள். எனது அம்மாவிற்கு அவரது கையில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு அவருக்கு தையல் போட்டுள்ளோம். விபத்து நடந்த

அன்று இரவு நான் அம்மாவுடன் மருத்துவமனையில் இருந்தபொழுது, போலிசார் அங்கு வந்து எனது அம்மாவிடம் விசாரித்து எழுதிக்கொண்டார்கள். விபத்தில் இறந்த எனது அண்ணனின் பிரேதத்தின் மீது, ஆத்தூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து போலிசார் பிரேத விசாரணை செய்து, என்னையும் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) விபத்தில் இறந்த பெரியசாமி எனக்கு என்ன உறவுமுறை என்றால் அண்ணன். இச்சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்து குறித்து கேள்விபட்டுதான் நான் சென்று பார்த்தேனா என்றால் ஆமாம்.

2) இச்சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்ற நிலையில், இறந்துபோன நபர் எனது அண்ணன் என்பதால், அ.சா.1 கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு விபத்திற்கும், ஆஜர் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னாலும், எதிரியின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் இந்த விபத்து ஏற்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

முடிவு நேரம் 04.16 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.07.22 17:59:41 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 330/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-5 (LW-10)***

*Name / Father's Name:* ***திருமதி.பாசமலர் க/பெ. பெரியசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22.07.2025.**

துவக்க நேரம் 04.17 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது காமக்காபாளையத்தில் குடியிருந்து, இல்லத்தரசியாக இருக்கிறேன். விபத்தில் இறந்த பெரியசாமி, எனது கணவர். கடந்த 21.05.2024 அன்று எனது கணவர் பெரியசாமி, மணிவிழுந்தானில் உள்ள எனது நாத்தனார் வீட்டிற்கு சென்றுவிட்டு, எங்களது வீட்டிற்கு வரவேண்டி மும்முடி அருகே வந்துகொண்டிருந்தபொழுது, அவர்களுக்கு எதிரே வந்த பிக்கப் வாகனம் அவர்கள்மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனது ஊர்க்காரர் ஒருவர், எனக்கு தகவல் சொன்னார்.

2) விபத்து குறித்து தகவல் கிடைத்தவுடன் நான், ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று எனது கணவரை பார்த்தேன். எனது கணவருக்கு தலையில் பலத்த அடிபட்டு இறந்துகிடந்தார். எனது பெரிய நாத்தனார் மகனுக்கும், எனது மாமியாருக்கும் மேற்படி விபத்தில் அடிபட்டிருந்தது. விபத்தில் இறந்த எனது கணவரின் பிரேதத்தின் மீது, ஆத்தூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து போலிசார் பிரேத விசாரணை செய்து, என்னையும் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) விபத்தில் இறந்த பெரியசாமி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது கணவர். இச்சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்து குறித்து கேள்விபட்டுதான் நான் சென்று பார்த்தேனா என்றால் ஆமாம்.

2) இச்சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்ற நிலையில், இறந்துபோன நபர் எனது கணவர் என்பதாலும், விபத்தில் அடிபட்ட சந்தோஷ் எனது நாத்தனாரின் மகன் என்பதாலும், விபத்தில் அடிபட்ட மாரியம்மாள் எனது மாமியார் என்பதாலும், அ.சா.1 மாரியம்மாள் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு விபத்திற்கும், ஆஜர் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னாலும், எதிரியின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் இந்த விபத்து ஏற்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

முடிவு நேரம் 04.26 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.07.22 17:59:47 +0530

Judicial Magistrate No.2, Attur.